மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

A Study of Dalit Rhetoric

D. Moorthy

Research Scholar, Vels Institute of Science Technology and Advanced Studies (VISTAS), Chennai, India

Manuscript ID : **MT127A0062**

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 16.09.2022
Revised: 19.09.2022
Accepted: 22.09.2022
Published: 30.09.2022

Pages : 99-105

DOI: 10.5281/zenodo.7371872

ABSTRACT:

In today's context, a word that is inevitably uttered in all spheres of society, namely, the intellectual base and the political sphere, is the term 'Dalit' because of the protracted struggle of the oppressed people against the tyranny of Varunadharma, one of the brahmanical diseases that has plagued Indian society for ages, and the tireless sacrifice of scholars and activists who worked tirelessly in the field of knowledge and action for the emancipation of the people. The code is established in the case. The term is used to refer to the depressed classes of people who have been subjected to untouchability in the name of caste in the universal public sense, irrespective of language differences.

KEYWORDS:

Dalitya, Slavery, Oppression, Rise, Struggle

தலித்தியச் சொல்லாடல் ஓர் ஆய்வு

தா. மூர்த்தி,
முனைவர் பட்டம் ஆய்வாளர்,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

இன்றைய சூழலில் அறிவுத் தளம், அரசியல் தளம் என சமுதாயத்தின் சகல தளங்களிலும் தவிர்க்கவியலாமல் உச்சரிக்கப்படும் ஒரு சொல் தலித் பன்னெடுங்காலமாக இந்தியச் சமுதாயத்தைப் பிடித்துள்ள பார்ப்பனிய வியாதிகளில் ஒன்றான வருனாதருமம் எனும் வன்கொடுமைக்கு எதிராக, ஒடுக்கப்பட்ட மக்களின் நெடிய போராட்டம், அம்மக்களின் விடுதலைக்கு அறிவுத்தளத்திலும், செயல்தளத்திலும் அயராது பாடுபட்ட அறிஞர் பெருமக்கள், போராளிகளின் தீராத் தியாகம் ஆகியவற்றால் 'தலித்' எனும் இச்சொல் இன்று போர்க்குணத்தின் சாதி எதிர்ப்பின் குறியீடாக வழக்கில் நிலைபெற்றுவிட்டது. இச்சொல் மொழி வேறுபாடு கடந்து உலகளாவிய பொதுப் பார்வையில் சாதியின் பேரால் தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்படுத்தப்பட்ட அடித்தள மக்களைக் குறிக்கப் பயன்படுகிறது.

கருச்சொற்கள்

தலித்தியம், அடிமைத்தனம், ஒடுக்குமுறை, எழுச்சி, போராட்டம்

முன்னுரை

இன்றைய தமிழ் இலக்கியச் சூழலில் 'தலித்தியம்' என்ற சொல் பல்வேறு தரப்பினராலும் விவாதிக்கப்பட்டும் ஒன்றாக மாறி வருகிறது. காலங்காலமாய் ஆதிக்கச் சாதியினரால் எல்லாத் தளங்களிலும் ஒடுக்கப்பட்டு வரும் தலித் மக்கள் விடுதலை பெற வேண்டும் என்பதை அடிப்படை நோக்கமாக கொண்டதே தலித்தியம், சாதி ஒழிப்பு முயற்சிகளும். கல்வி, பெண்விடுதலை, இட ஒதுக்கீடு, பஞ்சமி நிலக் கிளர்ச்சிகளும் அரசியல் பொருளாதார சமத்துவத்தை எதிர்நோக்கும் எழுச்சிகளும் தமிழகத்தில் தலித் இலக்கியங்கள் உருவாகக் காரணிகளாக அமைந்துள்ளன. தலித் படைப்புக்களே படைப்புச் சமுகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கிறது எனலாம். தலித்தியப் படைப்புகள் என்பது தலித்துக்களின் விடுதலையை மையமாகக் கொண்டவை.

அண்மைக் காலமாய் வீரியத்தோடு கிளம்பிவரும் தலித் இலக்கியங்கள் தலித் விடுதலையை முன்வைத்தே எழுச்சி பெற்றுள்ளன. அவற்றுள் டாக்டர் எல். யேசுமரியான் என்னும் தலித் இனப் படைப்பாளியால் படைக்கப்பட்டு வரும் மக்கள் களம் மாத இதழை கூர்ந்து நோக்கி அவற்றின் வழி வெளிப்படும் தலித் விடுதலைச் சிந்தனைகளைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது இன்றியமையாததாகும்.

தலித்தியம் - ஒரு விளக்கம்

அண்மைக்காலத்தில், சமுக பண்பாட்டுத் தளத்தில் தோன்றியுள்ள தலித் எழுச்சி கவனிக்கத்தக்க ஒன்றாக உள்ளது. பரவலாகவும் சற்று ஆழமாகவும் உரத்த குரலில் இது தன்னைக் காட்டி வருகிறது. 'தலித்' என்ற சொல் மராட்டியச் சொல். ஒடுக்கப்பட்ட மக்கள் என்பது இதன் பொருள் இது சாதியைக் குறிப்பதல்ல. ஆனால் இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற பொருளை இது உணர்த்துகிறது. பஞ்சமர், அட்டவணைச் சாதிகள் (Sheduled castes and tribes) அரிசனங்கள், ஆதி திராவிடர்கள் என்றல்லாம் முன்னர் அழைக்கப்பட்டு வந்த (அரசு நிலையில் இன்றும் அப்படித்தான்) வகுப்பினர், அண்மைக்காலமாகத் 'தலித்துகள்' என்று அடையாளப்படுத்தப்படுகின்றனர். இன்று தலித் என்ற சொல், தாழ்த்தப்பட்ட சில சாதிகளின் ஒரு கூட்டுவடிவ இலச்சினையாகவும், சற்று விரிவான பொருளில் ஒரு பண்பாட்டு அரசியலின் அடையாளமாகவும் இருக்கிறது. மேலும், இந்தச் சொல்லோடு, போராடுகிற ஒரு பண்பு, கூர்மையான ஒரு கருத்தாடல், ஒரு கலகக் குரல் என்ற பொருண்மைகளும் இணைந்துள்ளன. தலித் என்ற வழக்கு, குறிப்பிட்ட சில தாழ்த்தப்பட்ட வகுப்பினரைக் குறித்தாலும், இன்று சமூகச் சிந்தனையாளர்கள் பலரும் இந்தச் சொல்லை, சமூக விழிப்புணர்ச்சி பற்றிய சூழலில் பயன்படுத்துகின்றனர்.

தலித்திய வரலாறு

இந்திய தேசிய விடுதலை இயக்கத்தின் சூழலில், சமுகத்தின் பல மட்டங்களிலிருந்து எழுச்சியின் அசைவுகளும் அறிகுறிகளும் தோன்றின. அவற்றில் முக்கியமானது ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சியாகும். மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் அம்பேத்கர், தமிழகத்தைச் சேர்ந்த அயோத்திதாச பண்டிதர், இரட்டை மலை சீனிவாசன், எம்.சி.ராஜா முதலியோர் தலித்து எழுச்சிக்கு வித்திட்டவர்கள்; அதுபற்றிய சிந்தனையையும் முன்வரைவுத் திட்டங்களையும் வகுத்துக் கொடுத்தவர்கள், கோயில் நுழைவுப் போராட்டங்கள் உள்ளிட்ட ஒடுக்கப்பட்டோர் எழுச்சி பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே ஏற்பட்டுவிட்டது என்றாலும், தொடர்ந்து விடுதலைப் போராட்டக் காலத்தில் அவ்வப்போது தலைக்காட்டியது என்றாலும் 1990 - களில்தான் தலித் எழுச்சி குறிப்பிட்டத்தக்க உணர்வு நிலையாகவும் போராட்டப் பண்பாகவும்

ஆகியது. 1991 - 1992 ஆகிய இரண்டு ஆண்டுகள் அம்பேத்கர் நூற்றாண்டு விழா நடந்தது இதனுடைய தூண்டுதல், தலித்தியத்திற்கு உந்து சக்தியாக இருந்தது முக்கியமாக, சனநாயகம் என்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உண்மையான விடுதலையைத் தரவில்லை, இந்திய அரசியல் கட்சிகள் தங்களைப் பகடைக் காய்களாகவும், வாக்கு வங்கிகளாவுமே (Vote Bank) பயன்படுத்துகின்றன என்ற உணர்வு தலித் மக்களை வெகுவாகப் பாதித்த சூழல், அது. எனவே தலித்தியம், ஒரு வேகத்தோடு எழுந்தது. முக்கியமாகச் சிந்தனையாளர்களையும் இலக்கியம் மற்றும் பண்பாட்டுத் துறைகளில் ஈடுபட்டோரையும் இது அதிகமாகப் பாதித்தது. இதற்குமுன் பிரபலமடைந்திருந்த பெண்ணியத்தைவிடத் தலித்தியமே பரவலாகவும் கூர்மையாகவும் படைப்பிலக்கியத்திலும் மற்றும் பண்பாட்டுத் தளங்களிலும் தடம் பதித்திருக்கிறது.

தலித்தியம் - ஒரு புரிதல்

தீட்டுகள் நிறைந்த சமூக தீட்டான சாதிதான் ஒழிக்கப்பட வேண்டுமேயொழிய, மதமல்ல என்கிறார் அம்பேத்கர், சாதிகளைவிட அதை முத்துக்களாக கோர்த்து வைத்திருக்கும் மதம்தான் ஒழிக்கப்பட வேண்டும் என்கிறார் பெரியார். மதத்தை சமூகத்திலிருந்து உருவி விட்டாலும், சிதறிய முத்துக்களாய் சாதி இருந்து கொண்டேதான் இருக்கும் என்ற தீர்க்கதரிசனப் பார்வை அம்பேத்கருடையது.

தலித்தியத்தை தேடி

சமூகத்தின் பொதுவான அளவுகோலில் இருந்து தலித்களின் பிரச்சினையைப் பார்க்காமல் பிரத்யோகமாக தலித்துக்களின் கோணத்தில் இருந்து அணுகுவது அதாவது சமூகத்தை வர்க்கமாகப் பார்ப்பதை கறாராக மறுத்து சாதியாக பார்க்கிறது. தலித்தியம் தலித்மக்களின் பிரச்சனைக்கான தீர்வையும் சாதி வாதத்தை பேசியே பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கையை இது வழங்குகிறது.

ஆதிக்க சாதியில் ஏழைகள் இருந்தபோதும் அவர்கள் உயர்சாதியின் பண்புகளுடனேயே இருப்பதால், வர்க்க வேறுபாடு சாதியை ஒழித்துவிடாது என்பது தலித்தியத்தின் பிரதானமான நம்பிக்கை, கோட்பாடு.

இது தலித்தியம் பற்றி நான் புரிந்துகொள்வது ஆனால் இதன் மீதான என்விமர்சனம் வேறு, அடிப்படையில் ஏற்றத்தாழ்வு கொண்ட சமூகத்தில், சாதி வேறுபாட்டை கலைவதே எந்த இயக்கமாக இருந்தாலும், அதன் மைய நோக்கமாக இருக்க வேண்டும். ஆனால் தலித்தியம் என்பது சாதி வேறுபாட்டை மேலும், இருக்கமாக் காட்டுகிறது அதனால் மைய நோக்கத்தில் அது சிதைவுறுகிறது.

மாறாக உழைக்கும் மக்கள் என்ற பொதுவான தளத்தில் ஒன்று சேரும்போதுதான் அது அனைத்து ஒடுக்கப்படும் மக்களையும் ஒன்றிணைக்க முடியும், ஆதிக்க சாதியாக இருந்தாலும், அதில் உள்ள பணக்காரன், தன் சொந்த சாதியை சேர்ந்த ஏழை மக்களை கசக்கி பிழியவே செய்கிறான்.

தலித் மக்களின் அடையாளம், வாழ்வியல் பிரச்சினைகள், மனித உரிமை, பொருளாதார - அரசியல் போராட்டங்கள், இலக்கியம், பண்பாடு போன்ற அம்சங்களை ஆயும் இயல் தலித்தியல் எனலாம். தலித் (Dalith) என்றும் மராட்டியச் சொல்லுக்கு பள்ளம், பள்ளத்தாக்கு, என்பது பொருள், இச்சொல் இடவாகு பொருளாக பள்ளத்தில் வீழ்த்தப்பட்டவன், அல்லது தள்ளப்பட்டவன் அல்லது அமுக்கப்பட்டவன் என்றெல்லாம் பொருள் தரும் இதற்கு அடக்கப்பட்டவன், ஒடுக்கப்பட்டவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

ஆங்கிலத்தில் Depressed என்னும் சொல்லுக்கு 'அழுத்தப்பட்டவன்' என்னும் பொருள் கொண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பினரை Depressed class என்று அழைப்பது போல், தலித் என்னும் சொல்லால் இவர்கள், வீழ்த்தப்பட்டவர்கள், பின் தள்ளப்பட்டவர்கள், அடக்கப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் என்று அழைத்துக் கொள்கின்றனர். இச்சொல் இந்தியாவின் அனைத்து இனக் கூறினர்க்கு ஒரு பொதுவான சொல்லாக வழங்கப் பெறுவது.

தலித்தியத்திற்கு பெருஞ்சித்தனர் கூறும் விளக்கம் என்பது தமிழ் தேசியவாதத்திற்கு அப்பால் முதலாளித்துவ (விளிம்புநிலை பற்றிய பகுதியையும் கவனிக்க) சமத்துவத்தினை வழங்காத நிலையில் மக்கள் கூட்டத்தினை ஒரு வரையறைக்குள் அழுத்திவிடும் நிலைக்குள் தான் இன்றையப் போக்கு இருக்கின்றது. பெருஞ்சித்தனார் முன்வைக்கும் ஜனநாயக உரிமையை கவனத்தில் கொள்ளுதல் தகும். ஒரு மக்கள் கூட்டம் தன்னை தாழ்ந்தவர்கள் என ஏன் பிரகடனப்படுத்த வேண்டும். தம்மை தாழ்ந்தவர்கள் என்று பிரகடனப்படுத்தி உரிமையை பிச்சையாக பெறவேண்டிய தேவை எந்தக் குடிகளுக்கும் இல்லை இது குறைந்தபட்சம் இந்த முதலாளித்துவ உலகில் உள்ள நீதி நெறியாகும்.

தலித்துகள் மீதான தாக்குதல்களும் நீதிமன்ற தீர்ப்புகளும்

இந்தியா

1. வெண்மணி கிராமத்தில் 44 தலித் விவசாயத் தொழிலாளர்கள் உயிரோடு எரித்துக் கொள்ளப்பட்ட வழக்கில் பிரதான குற்றவாளியான கோபாலகிருஷ்ண நாயுடு உட்பட குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட்டனர். இத்தகைய பெரிய மனிதர்கள் உயிரோடு எரிப்பது போன்ற செயலில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள் என்று நீதிமன்றம் கூறியது.
2. திண்ணியம் என்ற கிராமத்தில் தலித் ஒருவரின் வாயில் மலத்தை திணித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சாதி ஆதிக்க எண்ணம் கொண்ட வெறியர் விடுவிக்கப்பட்டார். முதல் தகவலறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பு உயர் அதிகாரியின் அனுமதி பெறவில்லை என்று காரணம் கூறப்பட்டது.
3. பீகார் மாநிலம் பதானிதோலா என்ற இடத்தில் 1996 ஆண்டு 21 தலித்துக்கள் கொடுரமாகக் கொலை செய்யப்பட்டனர். இந்த வழக்கை விசாரித்த அரா மாவட்டத்தின் அமர்வு நீதிமன்றம் 3 பேருக்கு தூக்குத் தண்டனையும், 20 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தது. ஆனால் பாட்னா உயர்நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட 23 பேரையும் விடுவித்து உத்தரவிட்டது. இந்த படுகொலையை நேரில் கண்டவர்கள் அளித்த சாட்சியத்தின் அடிப்படையில்தான் அமர்வு நீதிமன்றம் தெளிவான தீர்ப்பு வழங்கியது. ஆனால் சாட்சியத்தில் தெளிவில்லை என்று கூறி பாட்னா உயர்நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்துள்ளது.
4. தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கருவானூர் என்ற தன் சொந்த ஊர் கோவிலில் சாமி கும்பிட்டதற்காக அந்த ஊர் மக்களே தலித் சிறுவனை அடித்து வன்கொடுமை செய்தனர்.
5. மும்பையில் உள்ள அகமது நகரில் நடந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த சகார் ஷெஜ்வல் என்ற 21 வயது இளைஞன் மே 16 ஆம் தேதி 2015 ஆம் ஆண்டு அம்பேத்கரின் பாடலை செல்போனில் வைத்திருந்ததற்காக கொலை செய்யப்பட்டான்.
6. கர்நாடக மாநிலத்தில் கஷன் மாவட்டத்தில் அமைந்துள்ள ஹொலேநார்சிபூர் தாலுகாவுக்கு உட்பட்ட ஒரு கோவிலுக்குள் சாமி தரிசனம் செய்யச் சென்ற பெண்களை உயர் சாதி என்று சொல்லிக்கொள்ளும் சிலர் அபராதம் விதித்தனர்.
7. சனவரி 2016 அன்று தெலுங்கானா மாநில தலைநகரான ஹைதராபாத்தின் மத்திய பல்கலைக் கழகத்தில் ரோஹித்வெமுலா என்ற மாணவன் அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் அமைப்பு (ஏபிவிபி) மாணவர்களின் தாக்குதலால்

தூக்கிலிட்டு மரணம் அடைந்தான் இந்த மாணவனின் தந்தை தனது மகன் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த கல்லுடைக்கும் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்றும் அவரது தாயார் தான் பட்டியலின ஜாதியைச் சேர்ந்தவர் என்றும் பேலீஸ் விசாரணையில் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பிற்படுத்தப்பட்ட ஜாதியில் இருந்து படித்துவந்த இடையில் தான் பட்டியலின ஜாதி சான்றிதழ் பெற்றுக் கொண்டார் என்றும் அவரது தந்தையால் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 32 மாவட்டங்களில் 28 மாவட்டங்கள் தலித்துகள் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர் என ஆதிதிராவிடர்களுக்கான தேசிய ஆணையம் அறிவித்துள்ளது.

முடிவுரை

சாதியைப் பற்றி சாதி அமைப்பை பற்றி இன்று சமூகம் நிறையவே விவாதித்து வருகிறது. நேற்று வரை தமது வாழ்க்கையை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமை இல்லாத தலித்கள் இன்று சமூக வாழ்க்கையை தாமே நிர்ணயிப்போம் என முன் வருகிறார்கள். இது இந்திய வரலாற்றில் ஒரு மகத்தான காலக்கட்டம். இந்தக் கட்டம் அனைவரையும் சாதி அமைப்பை பற்றி சிந்திக்க வைக்கிறது. அரசியல், பண்பாடு, வரலாறு, இலக்கியம் வாழ்க்கையின் ஒவ்வொரு தளத்திலும் விவாதம் நடைபெற்று வருகிறது.

தொகுப்புரை

1. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மக்களை பற்றிய தகவல்களை ஆய்வுலகிற்குக் கொண்டுச் செல்ல முடியும்.
2. இதுபோன்ற சிறு கட்டுரைகள் ஆய்வுக்கு உதவியாய் நிற்கும்.
3. தலித்தியத்தை பற்றி இன்றைய சமூகம் தெரிந்து கொள்ள உதவும்.

துணைநூற்பட்டியல்

1. தலித்துகள் நேற்று இன்றுநாளை - ஆனந்த் டெல்டும்டே, தமிழில்: பாலுமணிவண்ணன்.
2. உங்கள் மனிதம் சாதியற்றதா? - ஆசிரியர்: ஜெயராணி
3. மக்கள் களம் - மாண்பைக் காக்கும் மாத இதழ்: ஆசிரியர்: எல். யேசுமரியான்
4. திராவிடப் பத்திரிகைகளில் ஆதிதிராவிடர் ஆவணங்கள் - கோ. ரகுபதி
5. ஒரு தலித்திடமிருந்து (பரிசல்) - தமிழில் வெ. கோவிந்தசாமி
6. இணையதலத்தின் மூலம் பல்வேறு செய்திகள் திரட்டப்பட்டுள்ளது.

REFERENCES

1. Dalits yesterday, today tomorrow - Anand Teltumbde, In Tamil: BaluManivannan.
2. Is your humanity casteless? - Author: Jayarani
3. Monthly Magazine - That Protects The Dignity of the People's Field: Author: L. Yesumariyan
4. Adi Dravidar Documents in Dravidian Newspapers - G. Raghupathi
5. Oru Dalithidam Irundhu (Parisal) – V Govindasamy
6. Various messages have been collected through the internet.